**தலைப்பு 302 – கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு**

--------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 302 – கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

2022 திசெம்பர் 13 ஆம் திகதிய அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டி இலக்கம் 2022/05 இன் 6 ஆம் பந்தியின் ஏசீஏ- (சீ) மற்றும் 7.6 பந்தி என்பவற்றில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிதி மற்றும் குறுக்குப் பதிவுகள் இரண்டையும் கவனத்தில் கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும், முற்பணம் செலுத்துதல்கள் மற்றும் அறவிடும் போது குறுக்குப் பதிவுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலை கணிப்பிடும் போது ரூபா 272,970 ஆன முற்பணம் அறவிடல் கவனத்தில் கொள்ளாமையின் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக காசுப்பாய்ச்சல் அந்த அளவினால் | 2022 ஏப்ரல் மாதம் இலங்கை சுங்கத்தில் இருந்து கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு இடம் மாற்றலாகி வருகைதந்த உத்தியோகத்தரின் கடன் மீதியான ரூபா 272,970 குறுக்கு பதிவு மூலம் 2022 யூன் மாதம் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறைவடைந்திருந்தது. | முற்பணத்தை அறவிடல் இலங்கை சுங்கத்திற்கு உரியதாக இருந்தமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான காசுப்பாய்ச்சலாக வரவு மற்றும் செலவு குறிப்புக்களில் உள்ளடக்கப்படவில்லை. | |
| (ஆ) முற்பணம் செலுத்துதல்கள் ரூபா 837,621 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 564,651 ஆக ரூபா 272,970 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் ரூபா 272,970 இனால் குறைவடைந்திருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 302-01-01-1203 என்ற உணவு பானம் மற்றும் சீருடை செலவின விடயத்திற்காக ரூபா 24,000 நிதி ஏற்பாடு கோரப்பட்டிருந்த போதிலும், பொது திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் ரூபா 100,000 நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான இந்த செலவின விடயத்தின் செலவினம் ரூபா 20,000 மாத்திரம் ஆகும். | உள்ளபடியான நிலைமையின் அடிப்படையில் உரிய சரிசெய்தல்களை மேற்கொண்டு திருத்தம் செய்யப்படல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் மாதம் அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்ட கட்டிடத்திற்காக ரூபா 225,000 வாடகை 2023 சனவரி மாதம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. இலக்கம் 302-01-01-1404 என்ற வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வரி செலவின விடயத்தின் கீழ் அந்த பொறுப்புக்களை தீர்ப்பதற்காக நிதிஏற்பாடு எதுவும் சேமிக்கப்பட்டிருக்கவில்லை. | 302-01-01-1404 வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வரி செலவினத்திற்காக நிதிஏற்பாடு ஒதுக்கும் போது அலுவலகம் நடாத்திச் செல்கின்ற கட்டிடத்திற்காக 2021 திசெம்பர் மாதம் முதல் 2022 நவம்பர் மாதம் வரையான 12 மாதங்களுக்காக மாதம் ஒன்றுக்கு ரூபா 225,000 வீதம் ரூபா 2,700,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்த மொத்த நிதிஏற்பாடும் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 திசெம்பர் மாதம் கட்டிட வாடகைக்காக பொறுப்புக்களில் உள்ளடக்குவதற்கு நிதிஏற்பாடு போதியளவான இருக்கவில்லை. எனினும் காசு அடிப்படையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றமையால் திசெம்பர் மாத கட்டிட வாடகை தொகையை 2023 சனவரி மாதம் செலுத்துவதற்கும் 2023 ஆம் ஆண்டிற்காக கணக்கு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரித்துக் கொள்வதற்கு கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக | இந்த நிறுவனத்திற்காக ஒரு கணக்காளர் பதவி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், உள்ளக கணக்காய்வாளராக | சட்டத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| கணக்காய்வு இலக்குகளை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான திட்ட முறைமையொன்று உள்ளமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்பின் பிரகாரம் அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கும் இயலுமை காணப்படவில்லை. | எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை 02/2020 இற்கு உரியதாக விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 12 இன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பின்வரும் தகவல்கள் உள்ளடக்க வேண்டிய போதிலும், ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கீழே குறிப்பிடப்படுகின்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) உரிய ஆண்டிற்கு நாளதுவரையாக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையில் இருக்கின்ற பதவியணியினர் தொடர்பான விபரம்.<br><br>(ii) உரிய ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் | இதன் பின்னர் செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் அந்த ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு குறிப்பிடுகின்றோம். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், அமுல்படுத்தப்பட வேண்டிய கால அட்டவணை மற்றும் அந்த செயற்பாடுகளில் பூர்த்தி செய்யப்பட்ட / விளைவுகள், வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவை திட்டம், உள்ளக கணக்காய்வு திட்டம் | | |

## 3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 இன் செயலாற்றல் அறிக்கையில் 2022 ஆம் ஆண்டின் எதிர்கால தூர நோக்கின் கீழ் கூட்டுறவு ஊழியர்களுக்கு தாக்கமளிக்கின்ற தொழில் சட்டங்கள் மற்றும் கூட்டுறவு சட்டம் தொடர்பாக கூட்டுறவு ஊழியர்களுக்கு அறிவிப்பதற்காக ஒரு நாள் 10 செயலமர்வுகள் நடாத்துதல் மற்றும் அந்த செயலமர்வுகளுக்காக கூட்டுறவு சங்கங்களின் 400 ஊழியர்கள் அளவில் பங்குபற்றச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், ஆளணி கோவைகள் தயாரித்தல் மற்றும் ஊழியர் மனப்பாங்கை விருத்தி செய்வதற்கான 09 செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக கூட்டுறவு சங்கங்களின் 180 கூட்டுறவு ஊழியர்கள் அளவில் | எரிபொருளுக்காக அதிக செலவினத்தை செய்வதற்கு ஏற்பட்டிருந்தமை மற்றும் எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக எரிபொருளை பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட வசதியீனத்தால் கொழும்பு நகர எல்லையில் கூட்டுறவு சங்கங்களுக்கு மாத்திரம் செயலமர்வை ஒழுக்கமைக்க வேண்டி ஏற்பட்டது. அதனால் ஊழியர்களில் அதிக தரப்பினர் சேவையாற்றுகின்ற கல்வி கூட்டுறவு சங்கத்தில் மாவட்ட அல்லது மாகாண அலுவலகங்களில் செயலமர்வுகளை நடத்துவதற்கு வசதியற்றிருந்தது. அவ்வாறே அலுவலகத்தின் உத்தியோகத்தர்களும் பயிற்சி பாடநெறிக்கு விண்ணப்பத்திருந்தமையால் ஊழியர் தேவையை கவனத்தில் கொண்டு | திட்டமிடப்பட்ட பணிகளை ஆகக் கூடியளவில் செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பங்குபற்றச் செய்திருந்தனர். | அவர்களுக்கும் நிதிஏற்பாடு வழங்கவேண்டி ஏற்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் செயலமர்வு மற்றும் அதற்கு பங்குபற்றுகின்ற தரப்பினரை முகாமைத்துவம் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | |
| (ஆ) ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறையீடுகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பாக தேவையான பரிசோதனைகளை நடாத்துதல் ஆணைக்குழுவின் பிரதான பணியாக இருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில் கிடைத்த 05 முறைப்பாடுகள் மேலும் தீர்க்க வேண்டி இருந்தது. | 2022 இல் கிடைத்து தீர்க்கவேண்டியிருந்த 10 முறைப்பாடுகளில் 05 முறைப்பாடுகள் 2023.04.28 ஆம் திகதி தீர்க்கப்பட்டுள்ளது. மேலும் 05 முறைப்பாடுகள் மாத்திரம் தீர்ப்பதற்கு உள்ளது. | பிரதான பணிகளை தாமதம் இன்றி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 40(1) மற்றும் 40(2) பிரிவுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைளை மேற்கொள்வதற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிறுவனத்திற்காக ஒரு கணக்காளர் பதவி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், உள்ளக கணக்காய்வாளராக உத்தியோகத்தரை நியமிக்கும் இயலுமை காணப்படவில்லை. | சட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |